රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி:(94) 011- 2694560 / Telephone
ෆැක්ස් / தொலைநகல்:(94) 011- 2692254 / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: www.pubad.gov.lk / Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/03/01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2021.12.13

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சையை முழுமைப்படுத்தியுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சம்பள படியேற்றங்களை வழங்குதல்**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக அனுப்பப்பட்ட எனது CS/DOS/05/03/01 ஆம் இலக்க மற்றும் 2017.12.14 ஆந் திகதிய கடிதத்திற்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

02. இதுவரையில் 2015.05.09, 2016.12.22, 2018.06.30 மற்றும் 2019.11.30 ஆகிய திகதிகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான 4 வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சைகள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமான குறிப்பின் 10ஆவது பந்தியில் விவரிக்கப்பட்டுள்ளபடி 1 வது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை) நடத்தப்பட்டு, பெறுபேறுகளும் வெளியிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், மேற்படி வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சைகளில் முதலாவது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சையை பூர்த்தி செய்த கணிசமான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களின் சேவையை உறுதிப்படுத்துவதற்கான உரிய ஆவணங்கள் இணைந்த சேவைகள் பிரிவுக்கு இன்னும் அனுப்பப்படவில்லை என்பதை நான் அவதானிக்கிறேன். அத்துடன், அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்காக அனுப்பப்பட்ட ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் பற்றி அமைச்சின் இணையத்தளத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

03. அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2016.05.24 ஆந் திகதி "வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சைகள் தொடர்பில் சலுகைகளை வழங்குதல்" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட 03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு ஏற்ப, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதுடன், ஒரு வருடத்திற்கு இரண்டு முறை வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் தொடர்ச்சியாக 6 அமர்வுகளுக்குள் வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சையை முழுமைப்படுத்த உத்தியோத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

04. அதற்கிணங்க, 03/2016 ஆம் இலக்க அரச சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பந்தி 4 இல் தொடர் இலக்கம் 4இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு ஈட்டியுள்ள சம்பள படியேற்றத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

- குறித்த பல்கலைக்கழகத்தின் மூலம் பட்டப்படிப்பை உறுதி செய்திருக்க வேண்டும்.
- வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை பெறுபேறுகள் உரிய வடிவத்தில் குறித்த உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- உத்தியோகத்தரின் தகுதிகாண் அறிக்கை செயலாற்றுகை அறிக்கைகள் உரிய வகையில் பூர்த்திசெய்யப்பட்டு, தரங்கணிப்பாளர் மதிப்பீட்டாளர் முறையாக மதிப்பீடு செய்திருக்க வேண்டும்.
- வருடாந்த சம்பள ஏற்றம் தொடர்பான ஏனைய அனைத்து தேவைகளும் முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன்,
- சேவையில் நிரந்தரமாக்குவதற்கு தேவையான அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

05. இவ்வாறு சம்பள படியேற்றம் வழங்கப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவையை உறுதிப்படுத்துவதற்காக, உரிய ஆவணங்களை நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் பூரணப்படுத்தி தாமதமின்றி எனக்கு அனுப்பி வைக்குமாறு அறியத் தருகிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்